# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 259/ந/2025, நாள் 14.11.2025

சு. தட்சணாமூர்த்தி,
நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
புன்செய்ப் புளியம்பட்டி, ஈரோடு மாவட்டம். – எதிர்மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், விருவீடு (அஞ்சல்), மெயின் ரோடு, எண்.1/241 என்கிற முகவரியில் வசிக்கும் சு. தட்சணாமூர்த்தி என்பவரின் 17.07.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.07.2025 அன்று பெறப்பட்டு, 259/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், விருவீடு (அஞ்சல்), மெயின் ரோடு, எண்.1/241, என்கிற முகவரியில் வசிக்கும் சு. தட்சணாமூர்த்தி என்பவரது 17.07.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"நான் ஈரோடு மாவட்டம் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணியாற்றி வந்தேன். கடந்த 25.03.2025 அன்று மாலை, இயக்குநர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் நிர்வாக நலன் கருதி புன்செய்ப் புளியம்பட்டி துப்புரவு ஆய்வர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு தற்போது இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை நகராட்சியில் கடந்த 27.03.2025 முதல் துப்புரவு ஆய்வராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த மார்ச் 2025 இறுதியில் தமிழக அரசு, அரசு ஊழியர்களுக்கு 2% அகவிலைப்படி உயர்வு 01.01.2025 முதல் முன்தேதியிட்டு வழங்க உத்தரவிட்டும், நான் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பணிபுரிந்த 01.01.2025 முதல் 25.03.2025 காலத்திற்கான 2% அகவிலைப்படி உயர்வினை வழங்க மறுக்கின்றனர்.

எனவே, என்மீது கருணை கொண்டு அரசு அறிவித்த 2% அகவிலைப்படி 01.01.2025 முதல் 25.03.2025 வரை புன்செய்ப் புளியம்பட்டி ஆணையர் அவர்கள் எனக்கு வழங்க உத்தரவிட பணிந்து வேண்டுகின்றேன்."

2) மனுதாரரின் புகார் குறித்து புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 24.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3) புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஆணையரின் கடிதம் ந. க. எண்.2220/2025/இ1, நாள் 05.08.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

"திரு. எஸ். தட்சணாமூர்த்தி, என்பவர் இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந. க. எண். 484/2025/எச்1, நாள் 23.03.2025–ன் படி வாலாஜாபேட்டை நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்யப்பட்டதன் அடிப்படையில் கடந்த 25.03.2025 அன்று இந்நகராட்சியில் இருந்து விடுவித்து உத்தரவிடப்பட்டது. இந்நிலையில் துப்புரவு ஆய்வாளர் திரு. எஸ். தட்சணாமூர்த்தி என்பவர் 2% அகவிலைப்படி கோரி நாளது தேதிவரை எந்தவொரு கடிதமும் இந்நகராட்சியில் சமர்பிக்கவில்லை. மேலும் வாலாஜாபேட்டை நகராட்சியில் அகவிலைப்படி பெற்றுள்ளாரா என்ற விபரமும் இந்நகராட்சிக்கு கிடைக்கப்பெறவில்லை. எனவே, வாலாஜாபேட்டை நகராட்சியில் அகவிலைப்படி பெறவில்லை என்பதற்கான தடையின்மை சான்று சமர்பிக்கும்பட்சத்தில், தனியருக்கு 01.01.2025

முதல் 25.03.2025 வரையுள்ள காலத்திற்கான 2% அகவிலைப்படி வழங்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4) மேலும், கடித ந.க.எண்.2220/ 2025/இ1, நாள் 23.09.2025–ல் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஆணையர் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"ஆணையாளர், வாலாஜாபேட்டை நகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.1672/2025/எச்1, நாள் 14.08.2025–ல் துப்புரவு ஆய்வாளர் திரு. எஸ். தட்சணாமூர்த்தி என்பவருக்கு 01.01.2025 முதல் 25.03.2025 வரையுள்ள காலத்திற்கான 2% அகவிலைப்படி வழங்கப்படவில்லை என கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், துப்புரவு ஆய்வாளர்திரு. எஸ். தட்சணாமூர்த்தி என்பவருக்கு 2% அகவிலைப்படித் தொகை ரூ.3,107/– இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, காசோலை எண்.000039, நாள் 23.09.2025–ன் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

5) மின்னஞ்சல் மூலம் பெறப்பட்ட மனுதாரரின் 23.10.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

"நான் தங்களது அலுவலகத்திற்கு கடந்த 17.07.2025–ல் எனக்கு சேர வேண்டிய அகவிலைப்படி 2 சதவீதம் எனக்கு வழங்க ஆணையர், புன்செய்ப் புளியம்பட்டி அவர்கள் மறுப்பதாகவும் அதனை பெற ஏதுவாக, தங்களிடம் புகார் மனு சமர்ப்பித்திருந்தேன். மேற்படி நகராட்சியிலிருந்து கடந்த 23.09.2025 அன்று வங்கி காசோலை எண். 741020047 தொகை ரூ. 3107/–க்கான வங்கி காசோலை பெற்றுக் கொண்டேன் என்பதனை தங்களுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்கின்றேன்.''

6) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான புன்செய்ப் புளியம்பட்டி, நகராட்சி ஆணையர் ஆகியோரை 28.10.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7) மனுதாரர் 28.10.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை. மனுதாரரின் 28.10.2025 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"எனது கோரிக்கை மனுவினை ஏற்று 28.10.2025 நண்பகல் 12.00 மணியளவில் தங்களது அலுவலகத்தில் ஆஜராக கடிதம் கிடைக்கப்பெற்றது. எதிர் மனுதாரரான ஆணையர் புன்செய்ப் புளியம்பட்டி எனக்கு சேரவேண்டிய நிலுவைத் தொகை ரூ.3107/–க்கான காசோலை வழங்கப்பட்டுவிட்டதாலும், இன்று 28.10.2025 நான் பணிபுரியும் வாலாஜாபேட்டை நகராட்சி பகுதியில் கனமழை பெய்து வருவதால் என்னால் நேரில் ஆஜராக இயலவில்லை. மேலும் எனது கோப்பினை முடிவுக்கு வர சம்மதிக்கின்றேன்.''

8) எதிர் மனுதாரரான புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 2220/2025/இ1, நாள் 24.10.2025–ல் 28.10.2025 அன்று தமிழ்நாடு அரசின் சிறப்பு வார்டு கூட்டம் நடைபெற உள்ளதால், நகராட்சி மேலாளர் (பொ) திரு. ப. செல்வக்குமார் என்பவரை விசாரணையில் கலந்து கொள்ள அனுப்பிவைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நகராட்சி கணக்கர் மற்றும் மேலாளர் (பொ) 28.10.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு. சு. தட்சணாமூர்த்தி என்பவர் வாலாஜாபேட்டை நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்யப்பட்டு வாலாஜாபேட்டை நகராட்சியில் பணிபுரிந்து வருகிறார். திரு. சு. தட்சணாமூர்த்தி என்பவர் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பணிபுரிந்த காலத்திற்கு 2% அகவிலைப்படி கோரி நாளது தேதிவரை எந்தவொரு கடிதமும் நகராட்சியில் சமர்ப்பிக்காததாலும், வாலாஜாபேட்டை நகராட்சியில் மேற்படி அகவிலைப்படித் தொகை பெற்றுள்ளாரா என்ற விபரமும் கிடைக்கப் பெறாததாலும், தனியருக்கு 01.01.2025 முதல் 25.03.2025 வரையுள்ள காலத்திற்கான அரசு அறிவித்த 2% அகவிலைப்படி வழங்கப்படாமல் இருந்தது.

தற்போது, திரு. சு. தட்சணாமூர்த்தி என்பவருக்கு 01.01.2025 முதல் 25.03.2025 வரையுள்ள காலத்திற்கான 2% அகவிலைப்படி வழங்கப்படவில்லை என்பதற்கான கடிதம் வாலாஜாபேட்டை நகராட்சியிலிருந்து வரப்பெற்றதைத் தொடர்ந்து, அரசு அறிவித்த 2% அகவிலைப்படி நிலுவைத்தொகை ரூ.3107/– இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலை எண்.000039 நாள் 23.09.2025–ன் வாயிலாக தனியருக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரரின் புகார் மனு மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரருக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதால், மனு மீதான நடவடிக்கையினை முடித்து வைக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

9) மனுதாரரின் புகார் மனு, மின்னஞ்சல் கடிதங்கள், எதிர்மனுதாரரான புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகராட்சி கணக்கர் மற்றும் மேலாளர் (பொ) அவர்களின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர், ஈரோடு மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியிலிருந்து பணியிடமாறுதல் மூலம் இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை நகராட்சியில் துப்புரவு ஆய்வராக பணிபுரிந்து வரும் நிலையில், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பணிபுரிந்த காலத்திற்கு அரசு அறிவித்த 2% அகவிலைப்படி உயர்வு வழங்கவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்ததும், பின்னர், மேற்படி அகவிலைப்படி நிலுவைத் தொகை வழங்கப்பட்டுவிட்டதாக தெரிவித்திருப்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் கடிதத்திலிருந்து அறியமுடிகிறது.

மனுதாரருக்கு அகவிலைப்படி நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை என்ற விவரம் வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மனுதாரர் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பணியாற்றிய காலத்திற்கான 2% அகவிலைப்படி நிலுவைத் தொகை வழங்கப்பட்டுவிட்டது என்ற விவரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி கணக்கர் மற்றும் மேலாளர் (பொ) வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

எனவே, புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியிலிருந்து அகவிலைப்படி நிலுவைத் தொகை வழங்கப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டு புகார் மனுமீதான நடவடிக்கையை முடித்து வைக்குமாறு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஆணையர் ஆகியோரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதை ஏற்று, இப்பொருள் தொடர்பான நடவடிக்கையினை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்
1) திரு. சு. தட்சணாமூர்த்தி,
எண்.1/241, மெயின் ரோடு,
விருவீடு (அஞ்சல்), நிலக்கோட்டை தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம் – 624 220
2) நகராட்சி ஆணையர்,
புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சி,
புன்செய்ப்புளியம்பட்டி – 638 459, ஈரோடு மாவட்டம்.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

17/11/25

செயலாளர்.

17/11/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032